**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : செங்கேணி பழனி**

**தேதி 17.12.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3 நாடுகள் பயணத்தின் இறுதிக் கட்டமாக, இன்று மாலை, **ஓமன்** சென்றடைகிறார்.

நடப்பு தேவைகளுக்கு ஒவ்வாத **பழைய** சட்டங்களை ரத்து செய்வதற்கான மசோதா, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று, **வேலூர் தங்கக் கோவிலில்** வழிபட்டார்.

சட்டம்-ஒழுங்கிற்கு அப்பாற்பட்டு, **மக்களின் நம்பிக்கையை பெறுவதிலும்**, காவல் துறையினர் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

---------------------------

*மோடி-பயணம் 1 (6)*

அமைதியான, சமத்துவ உலகிற்கு பாடுபடுவதில், இந்தியாவும்-**எத்தியோப்பியாவும்**, ஒரே குடும்பமாக, ஒன்றுபட்டு நிற்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று **எத்தியோப்பியா** நாடாளுமன்றத்தின் கூட்டு அமர்வில் உரையாற்றிய அவர், தெற்குலக நாடுகள் ஒன்றாக உயர வேண்டும் என்பதிலும், இருநாடுகளும் ஒரே கருத்துக் கொண்டுள்ளதாக கூறினார். பிரதமரின் பயணம் குறித்து ஒரு செய்தித் தொகுப்பு….

*மோடி-பயணம்* 2 (18)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, **எத்தியோப்பிய** தலைநகர் **அடிஸ் அபாபாவில்**, அந்நாட்டு பிரதமர் திரு. **அபியகமது அலியுடன்** விரிவான முறையில் பேச்சு வார்த்தை நடத்தினார். ஜி-20 விதிமுறைகளின் கீழ், **எத்தியோப்பியாவின்** நிலுவைக் கடன்களை மறுசீரமைக்கவும், அந்நாட்டு இளைஞர்களுக்கு செயற்கை நுண்ணறிவு கற்பிக்கவும், ஐநா அமைதி

காக்கும் படையினருக்கு பயிற்சி அளிக்கவும், இருநாடுகளுக்கும் இடையே, 8 உடன்பாடுகள், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. எத்தியோப்பிய பிரதமர், அந்நாட்டின் மிக உயர்ந்த நிஷான் ஆஃப் எத்தியோப்பியா விருதை, பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கி சிறப்பித்தார். தொடர்ந்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3 நாடுகள் பயணத்தின் 3ஆவது மற்றும் இறுதிக் கட்டமாக, எத்தியோப்பியாவில் இருந்து, ஓமனுக்கு புறப்பட்டுச் சென்றார். ஓமனில், சுல்தான் ஹைத்தம் பின் தாரிக்கை அவர் சந்தித்து, பரஸ்பர அக்கறை உள்ள பல்வேறு பிரச்சனைகள் குறித்து பேச இருக்கிறார். நாளை, இருநாடுகளின் வர்த்தகத் தலைவர்களையும், பல தலைமுறைகளாக ஓமனில் வசிக்கும் இந்திய சமூகத்தினரையும், அவர் சந்திக்கிறார். இந்தியாவிற்கும்-ஓமனுக்கும் இடையிலான தூதரக உறவுகளின் 70ஆம் ஆண்டில், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஓமன் செல்வதும், குறிப்பிடத் தக்கது.

---------------------------

*மாநிலங்களவை-ரத்து மசோதா* (13)

நடப்பு தேவைகளுக்கு ஒவ்வாத பழைய சட்டங்களை ரத்து செய்து, வேறு சில சட்டங்களை நடப்புத் தேவைகளுக்கு ஏற்றபடி திருத்தம் செய்வதற்கான மசோதா நேற்று மக்களவையில் நிறைவேற்றப்பட்டதை தொடர்ந்து, இன்று மாநிலங்களவையிலும், விவாதங்களுக்கு பின்னர், நிறைவேற்றப்பட்டது. இந்திய Tramway சட்டம் உட்பட 71 சட்டங்களை ரத்து செய்யவும், வாரிசுரிமை சட்டம் உள்ளிட்ட 4 சட்டங்களில் திருத்தம் கொண்டு வரவும், இம்மசோதாவில் வகை செய்யப் பட்டுள்ளது. மத்திய சட்டத் துறை அமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால், மசோதாவை அவையில் கொண்டு வந்து பேசுகையில், மக்களின் வாழ்க்கையும், வர்த்தகம் புரிவதும், இதனால் எளிதாகும் என்றார். பிஜேபி உறுப்பினர் திரு. மதன் ரத்தோர், காங்கிரஸ் உறுப்பினர் திரு. விவேக் தன்க்கா, அஇஅதிமுக உறுப்பினர் டாக்டர் தம்பிதுரை திமுக உறுப்பினர் திரு. ராஜேஷ்குமார், உள்ளிட்டவர்களும், விவாதங்களில் பங்கேற்று பேசினர்.

---------------------------

*மாநிலங்களவை காப்பீடு* (11)

மாநிலங்களவையில், காப்பீட்டு சட்டங்கள் பற்றிய திருத்த மசோதா இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அனைவருக்கும் காப்பீடு-

அனைவருக்கும் பாதுகாப்பு என்னும் இம்மசோதாவை, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன், அவையில் தாக்கல் செய்தார். எல்.ஐ.சி சட்டம், மற்றும், காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணைய சட்டம் உள்ளிட்ட சட்டங்களை திருத்தும் வகையிலான இம்மசோதாவினால், காப்பீட்டுத துறையில் வளர்ச்சி பெருகவும், தடையற்ற காப்பீட்டு சேவைகள் மக்களுக்கு கிடைக்கவும் ஏதுவாகும் என்று, அவர் தெரிவித்தார். காப்பீட்டுத் துறையில், வர்த்தகம் புரிவதை எளிமையாக்கவும், வெளிப்படைத் தன்மையை அதகரிக்கவும், இம்மசோதா உதவிகரமாக இருக்கும் என்று, அவர் கூறினார்.

---------------------------

*நிர்மலா* (12)

இந்தியா கடந்த 10 ஆண்டுகளில், ஒவ்வொரு துறையிலும் அபார வளர்ச்சி கண்டுள்ளதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், இந்தியப் பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டில் அனைவருக்குமான நிதி வசதிகளும், தொழிலாளர் சக்தியில், மகளிர் பங்கேற்பும், மக்களின் ஊட்டச்சத்து நிலவரங்களும், வலுவடைந்து இருப்பதாக கூறினார். அனைவருக்கும முழுமையான மருத்துவ வசதிகள் கிடைப்பதையும், சாதாரண மக்களும், குறைந்த பரீமியம் கட்டணத்தில், காப்பீட்டு வசதி பெறுவதையும், அரசு உறுதிப்படுத்தி இருப்பதாக, நிதியமைச்சர தெரிவித்தார். நெடுஞ்சாலைகளுக்கான இணைப்பு சாலை வசதிகள் மேம்படுத்தப் பட்டுள்ளதால், தற்போது சிறு வியாபாரிகளும், எளிதில் சந்தைகளை அணுக முடிவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

--------------------------

*கலாச்சார மறுமலர்ச்சி* (14)

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா, குறிப்பிடத் தகுந்த அளவில், கலாச்சார, மற்றும், ஆன்மீக மறுமலர்ச்சி கண்டுள்ளதாக, மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சர் டாக்டர் வீரேந்திர குமார் கூறியுள்ளார். நாடு முழுவதும் பழமையான பல்வேறு கோவில்கள், மரபுச் சின்னங்கள், மற்றும், தேசிய நினைவிடங்கள், விரிவான முறையில், மறுமேம்பாடு செய்யப் பட்டுள்ளதாக, அவர் இன்று புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். பிரதமர் திரு. நரேந்திர மோடி

தலைமையின் கீழ், அயோத்தி முதல், காமாக்யா-கேதார்நாத், மற்றும், சோம்நாத் வரை, முக்கியமான பல யாத்திரைத் தலங்கள், சிறப்பான முறையில் புதுப்பிக்கப் பட்டுள்ளதாகவும், இதனால், இந்தியா, மற்றும், வெளிநாடுகளில் இருந்து, லட்சக்கணக்கிலான பக்தர்கள், இத்தலங்களை தரிசித்து வருவதாகவும், அவர் தெரிவித்தார். இந்தியாவில் இருந்து திருடப்பட்ட 344 பழங்கால கலைப் பொருட்கள், மீண்டும் இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

---------------------------

*முர்மு வேலூர் (17)*

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று, வேலூர் ஸ்ரீபுரத்தில் உள்ள, அரியூர் நாராயணி கோவிலில் வழிபட்டார். தங்கக் கோவில் என அழைக்கப்படும் இக்கோவில் வளாகத்தில், ஆயிரத்து 800 கிலோ வெள்ளியில் வடிக்கப்பட்ட விநாயகர், மற்றும், 700 கிலோ தங்கத்தில் வடிக்கப்பட்ட ஸ்வர்ண லட்சுமியை அவர் தரிசனம் செய்தார். ஸ்ரீனிவாசப் பெருமாள் சன்னதியில், ஆரத்தி எடுத்து வழிபட்ட குடியரசுத் தலைவர், தியான மண்டபம் ஒன்றையும் திறந்து வைத்தார். முன்னதாக, திருப்பதியில் இருந்து, ஹெலிகாப்டர் மூலம் ஸ்ரீபுரம் வந்து சேர்ந்த குடியரசுத் தலைவரை, தமிழக ஆளுநர் திரு. ஆர். என். ரவி, மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், மாநில அமைச்சர் திரு. ஆர். காந்தி ஆகியோர் வரவேற்றனர். கோவில் நிர்வாகம் சார்பில், குடியரசுத் தலைவருக்கு பாரம்பரிய முறையில், பூர்ண கும்ப மரியாதை அளிக்கப் பட்டது. தொடர்ந்து, கோவில் வளாகத்தில், குடியரசுத் தலைவர், மரக்கன்று ஒன்றை நட்டு வைத்தார். தரிசனம் முடிந்த பின்னர் அவர், ஸ்ரீபுரத்தில் இருந்து, திருப்பதி புறப்பட்டு சென்றார். குடியரசுத் தலைவரின் வருகையை ஒட்டி, வேலூரில் ஆயிரத்து 700க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.

---------------------------

*ஜி ராம் ஜி 1 (7)*

மக்களவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட, விக்சித் பாரத்-கிராமப்புற வேலை வாய்ப்பு, மற்றும், வாழ்வாதார உறுதியளிப்புத் திட்டம், குறிப்பாக வேளாண் துறையில், கணிசமான பலன்களை கொண்டு வரும்

என எதிர்பார்க்கப் படுகிறது. விக்சித் பாரத்- ஜி ராம் ஜி மசோதா என சுருக்கமாக அழைக்கப்படும் இம்மசோதாவில், கிராமப்புற குடும்பங்களுக்கு, ஆண்டுக்கு 125 நாள் வேலை வழங்க, சட்டப்பூர்வமாக வகை செய்யப் பட்டுள்ளது. இதுகுறித்து ஒரு செய்தித் தொகுப்பு.....

*ஜி ராம் ஜி 2 (18)*

நடவு, மற்றும், அறுவடை காலத்தில், விவசாயப் பணிகளுக்கு ஆள் கிடைக்க ஏதுவாக, மாநில அரசுகள் அதிகபட்சம் 60 நாட்கள் வரை, **விக்சித் பாரத் - ஜி ராம் ஜி** திட்டப் பணிகளை நிறுத்திக் கொள்ள, உத்தேச மசோதாவில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதனால், விவசாயப் பணிகளுக்கு ஆள் கிடைக்காமல் கூலியும், சாகுபடிச் செலவும் அதிகரிப்பதை தவிர்க்க ஏதுவாகும். **ஜி ராம் ஜி** திட்டத்தின் கீழ், குறிப்பாக, குளம்-குட்டை போன்ற நீர் ஆதாரங்கள், மற்றும், புதிய பாசன வசதிகளை உருவாக்கவும், நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிப்பதற்கான வசதிகளை பெருக்கவும், முன்னுரிமை அளிக்கப்படும் என்பதால், ஆண்டுக்கு 2 முதல், 3 போக சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட உதவிகரமாக இருக்கும் கிராமப்புற சாலை இணைப்புகள், மற்றும், சேமிப்புக் கிடங்கு வசதிகளும், மேம்படுத்தப்படும் என்பதால், விவசாயிகள், விற்பனைச் சந்தைகளை எளிதாக அணுக முடியும் என்றும், **அறுவடைக்குப் பிந்தைய பயிரிழப்பு**, கணிசமாக குறையும் என்றும், மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. **விக்சித் பாரத் – ஜி ராம் ஜி** திட்டத்தின் கீழ், மண்வளப் பாதுகாப்பு, வடிகால், மற்றும், வெள்ளத் தடுப்பு வசதிகளை மேம்படுத்தவும் உத்தேசிக்கப் பட்டுள்ளதால், பருவகால மாற்றங்களில் இருந்து பயிர்களைப் பாதுகாத்து, விவசாய உற்பத்தித் திறனை **ஸ்திரப்படுத்த** ஏதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---------------------------

*புதுச்சேரி போலீஸ் 1 (17)*

சட்டம-ஒழுங்கை பாதுகாப்பதில் மட்டுமின்றி, மக்களின் நம்பிக்கையை பெறுவதிலும்,காவல் துறையினர் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார். இன்று புதுச்சேரியில், மாநில காவல் துறை மாநாட்டில் உரையாற்றிய அவர், தொழில்நுட்பம் வளர, வளர, குற்றங்களும் அதிகரித்து வருவதால், புதிய குற்றங்களை கட்டுப்படுத்துவதற்கான புதிய தொழில்நுட்பங்களை காவல் துறையினர்

அறிந்து கொள்ள வேண்டும் என்றார். சட்டம-ஒழுங்கை பராமரிப்பதில், தேசிய அளவில் தற்போது 8ஆவது இடத்தில் உள்ள புதுச்சேரியை, 2 அல்லது 3ஆவது இடத்திற்கு உயர்த்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

மாநில உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் இம்மாநாட்டில் பேசுகையில், குற்றம் நிகழ்ந்த 90 நாட்களுக்குள், குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்வதில், புதுச்சேரி முதல் இடத்தில் இருப்பதாக தெரிவித்தார். காவல் துறையினர் நடத்தும் மக்கள் மன்றம் மூலமாக, இதுவரை 10 ஆயிரத்து 886 வழக்குகளுக்கு தீர்வு காணப் பட்டுள்ளதாகவும், போதைப் பொருள் விற்பவர்களை, ஆபரேஷன் விடியல் நடவடிக்கையின் மூலம் போலீசார் கண்டறிந்து, உரிய தண்டனை பெற்றுத் தருவதாகவும் அவர் கூறினார்.

*புதுச்சேரி போலீஸ் 2 (5)*

கடலோரக் காவல் படை, தேசிய பேரிடர் மீட்புப் படை, மற்றும், சைபர் குற்றங்களுக்கான ஒருங்கிணைப்பு மையத்தின் மூத்த அதிகாரிகள், இம்மாநாட்டில் தங்களின் செயல்பாடுகள் குறித்து, காவல் துறையினருக்கு எடுத்துக் கூறினர்.

புதுச்சேரியில் சிறப்பாக பணிபுரிந்த காவலர்கள், ஐஆர்பிஎன் படையினர், மற்றும், ஊர்க்காவல் படையினருக்கு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

---------------------------

*வானிலை (9)*

கிழக்கு திசைக் காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று தென்தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், வடதமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளை அதிகாலை வேளையில், ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, ராமநாதபுரம், கடலூர் மாவட்டம் கொத்தவாச்சேரி ஆகிய இடங்களில், 6 செ.மீ மழை பதிவாகி உள்ளது. புதுச்சேரியில், 2 செ.மீ மழை பெய்துள்ளது.

---------------------------

கிரிக்கெட் (4)

ஆடவர் கிரிக்கெட்டில், இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான, 4ஆவது 20 ஓவர் போட்டி, லக்னோவில் இன்று மாலை நடைபெற உள்ளது. 5 போட்டிகளை கொண்ட இத்தொடரில், இதுவரை முடிவடைந்த 3 போட்டிகளில், இந்தியா, 2க்கு-1 என்ற கணக்கில், முன்னிலையில் உள்ளது.

---------------------------

*ராஜ்நாத்-கண்காட்சி (10)*

புதுடெல்லியில், நாடாளுமன்ற கலை விழாவின் ஒருபகுதியாக ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, வீர் ரங்-ஆபரேஷன் சிந்தூர் ஓவியக் கண்காட்சியை, இன்று, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பார்வையிட்டார். இந்தியப் படையினரின் வீரம், தியாகம், மற்றும், சேவை உணர்வை ஓவியங்களாக வெளிப்படுத்தி, நாட்டின் ஒட்டுமொத்த பெருமிதத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன் இக்கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. துணிச்சல் மிகுந்த இந்தியப் படையினருக்கான, நாட்டு மக்களின் நன்றி உணர்வை, அர்த்தமுள்ள முறையில் வெளிப்படுத்தும் முயற்சியாக, இக்கண்காட்சி அமைந்து இருப்பதாக, பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---------------------------

நேஷனல் ஹெரால்ட் (11)

**நேஷனல் ஹெரால்ட் பணச் சலவை** வழக்கை விசாரணைக்கு ஏற்க, டெல்லி நீதிமன்றம் மறுத்துவிட்ட போதிலும், திருமதி சோனியா காந்தி, திரு. ராகுல்காந்தி ஆகியோர், குற்றமற்றவர்களாக அறிவிக்கப்படவில்லை என்றும், இவர்கள் இன்னும் ஜாமீன் அனுமதியில்தான் இருப்பதாகவும், பிஜேபி கூறியுள்ளது. இக்கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு. கவுரவ் பாட்டியா இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், வழக்கில் சாட்சியங்கள் அதிகரித்து வருவதால், எதிர்காலத்தில் குற்றம் நிரூபிக்கப்படவே வாய்ப்புகள் அதிகம் என்றார். நீதிமன்றத்தின் முடிவு தங்களுக்கு சாதகமாக இருந்தால், நீதித் துறையை கொண்டாடுவதும்,

பாதகமாக இருந்தால் விமர்சிப்பதும், காங்கிரஸ் கட்சிக்கு வாடிக்கை என்று, அவர் மேலும் குறிப்பிட்டார்.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3 நாடுகள் பயணத்தின் இறுதிக் கட்டமாக, இன்று மாலை, ஓமன் சென்றடைகிறார்.

நடப்பு தேவைகளுக்கு ஒவ்வாத பழைய சட்டங்களை ரத்து செய்வதற்கான மசோதா, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இன்று, வேலூர் தங்கக் கோவிலில் வழிபட்டார்.

சட்டம்-ஒழுங்கிற்கு அப்பாற்பட்டு, மக்களின் நம்பிக்கையை பெறுவதிலும், காவல் துறையினர் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என, புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

**இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது**